யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூன் - 2015
## Term Examination, June - 2015

| அரசியல் மூலத்தத்துவங்கள் | புள்ளித்திட்டம் | தரம் :- 13 (2015) |
|---|---|---|

### பகுதி - I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01) | 1 | 11) | 3 | 21) | 2 | 31) | 5 | 41) | 1 |
| 02) | 5 | 12) | 3 | 22) | 4 | 32) | 4 | 42) | 5 |
| 03) | 3 | 13) | 5 | 23) | 5 | 33) | 2 | 43) | 4 |
| 04) | 2 | 14) | 1 | 24) | 5 | 34) | 5 | 44) | 4 |
| 05) | 4 | 15) | 2 | 25) | 5 | 35) | 1 | 45) | 4 |
| 06) | 1 | 16) | 3 | 26) | 4 | 36) | 2 | 46) | 5 |
| 07) | 4 | 17) | 2 | 27) | 5 | 37) | 5 | 47) | 5 |
| 08) | 5 | 18) | 5 | 28) | 1 | 38) | 4 | 48) | 2 |
| 09) | 1 | 19) | 2 | 29) | 4 | 39) | 1 | 49) | 4 |
| 10) | 2 | 20) | 5 | 30) | 5 | 40) | 1 | 50) | 4 |

(50 x 2 = 100 புள்ளிகள்)

### பகுதி - II
### பகுதி - A

01) 1. மனித நடத்தையை அடிப்படையாகக் கொண்ட பாடத்துறையாக இருத்தல்
2. ஆய்வுகூடப் பரிசோதனைக்கு உட்படுத்த முடியாத பாடத்துறையாக இருத்தல்
3. ஏனைய சமூக விஞ்ஞானங்களுடன் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருத்தல்
4. விஞ்ஞான ரீதியான கற்கைகளுக்கு உட்படுத்த முடியாதிருத்தல்

02) 1. ஜோண்லொக் 2. றூசோ

03) 1. அரசிற்காகவே மக்கள்
2. தேர்தல்கள் இடம்பெறாது
3. போர் நோக்கங்கொண்ட ஆட்சிமுறை
4. அடிப்படை உரிமைகள் காணப்படமாட்டாது

04) 1. மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களைக் குறிப்பிட்டு எஞ்சியவற்றை பிராந்தியங்களுக்கு விடல்
2. பிராந்திய அரசாங்கத்தின் அதிகாரங்களைக் குறிப்பிட்டு எஞ்சியவற்றை மத்திய அரசாங்கத்திடம் விடல்
3. மத்திய, பிராந்திய, ஒருமைப்பாடு என்று 3 பட்டியல்களில் அதிகாரங்களைப் பகிர்தல்

05) 1. இரண்டாம் உலக மகாயுத்தத்தால் ஏற்பட்ட அழிவு
2. கெயின்சன் பொருளாதாரக் கோட்பாடு
3. தனியார்துறை புறக்கணித்த விடயங்களில் அரசு தலையீடு
4. சமூக பாதுகாப்பு நோக்கம்

06) 1. பலம் வாய்ந்த பிராந்திய அரசாங்கமும் பலவீனமான மத்திய அரசாங்கமும் காணப்படும்
2. அரசாங்கம் ஸ்திரமற்றதாகக் காணப்படும்
3. தமது தனித்துவத்தைப் பாதுகாத்துக் கொண்டே சில விடங்களில் ஏனைய பிராந்திய அரசுகளுடன் ஐக்கியமாகச் செயற்படுதல்

07) 1. வாக்காளர்களுக்கு விழிப்பூட்டுதல்
2. தலைவர்களைப் பயிற்றுவித்தல்
3. அங்கத்தவர்களை சேர்த்துக் கொள்ளல்
4. சமூக பலத்தை அதிகார பலமாக மாற்றுதல்

08) 1. மோதலின் வன்முறையையும் அழிவு மட்டத்தையும் இழிவளவாக்குதல்
2. மோதலின் உக்கிரத்தன்மை உயர்வடைவதைத் தடுத்தல்
3. பேரழிவு ஆயுதப் பயன்பாட்டைத் தவிர்த்தல்
4. வேறு திசைகளில் கிடையாக மோதல் பரவுதலைத் தடுத்தல்

09) 1. பொலிஸ் 2. பணிக்குழு

10) 1. தனியாட்கள் வகைப்படுத்தலுக்குட்படாமை
2. சமவாய்ப்புக்கள் அனைவருக்கும் வழங்கப்படல்
3. அனைவருக்கும் சம உரிமை கிடைத்தல்

11) 1. தன்னிறைவுப் பொருளாதாரம் சிதைவடைந்தமை
2. பெருந்தோட்ட வர்த்தகத் துறையின் அறிமுகம்
3. உள்நாட்டுக் கைத்தொழில்களின் வீழ்ச்சி
4. முதலாளித்துவத்தின் தோற்றம்

12) 1. குடியேற்ற நாட்டு நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை நடாத்துதல்
2. கல்வி கற்ற உயர்குழுவினர் இலங்கை நிர்வாகத்தில் பங்கு பற்றுதல்

13) 1. சர்வசன வாக்குரிமையின் மூலம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் - 50 பேர்
2. ஆள்பதியால் நியமிக்கப்பட்டவர்கள் - 08 பேர்
(இவர்களுள் சபாநாயகர் இடம்பெறமாட்டார்)

14) 1. சிறுபான்மை இனத்துக்கு போதிய பிரதிநிதித்துவம் பாதுகாப்பினை வழங்குதல்
2. பிரித்தானியாவின் ஏனைய குடியேற்ற நாடுகளிலும் இதுபோன்ற 2ம் மன்றம் காணப்பட்டமை
3. தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்படாத புத்திஜீவிகளின் ஆலோசனைகளையும் சேவைகளையும் பெறுதல்

15) 1. யாப்பின் நீதிப்புனராய்வு
2. அவசர மசோதாக்கள் 24 மணித்தியாலத்திற்கும் சாதாரண மசோதாக்கள் 14 நாட்களுக்கும் ஆலோசனை வழங்கல்

16) 1. பாராளுமன்றப் பேரவை
2. சனாதிபதி பாராளுமன்றத்துக்கு மூன்று மாதத்திற்கு ஒரு தடவை சமூகமளித்தல்
3. ஒருவர் எத்தனை தடவைகளும் சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட முடியும்

17) 1. பழைய யூகோஸ்லாவியா தொடர்பான சர்வதேச குற்ற நியாதிக்க சபைகள் (ICTY)
2. றுவாண்டா தொடர்பான சர்வதேச நியாயாதிக்க சபைகள் (ICTR)

18) 1. தேவையான தொழில்நுட்ப வசதிகளை வழங்குதல்
2. அங்கத்துவ நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இடையே தொடர்பைப் பேணுதல்
3. பிராந்தித்திலுள்ள அபிவிருத்தி குறைந்த நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கான நிதி வசதிகளை ஏற்பாடு செய்தல்

19) 1. தெற்காசிய விருப்புரிமை வர்த்தக ஒப்பந்தம் (SAPTA)
2. தெற்காசிய விருப்புரிமை வர்த்தக (SAFTA)

20) 1. ஜெனீவா ஒப்பந்தம்
2. ஹென்றி டு டான்ட்

## பகுதி - B

*01)*

(i) அரசியல் விஞ்ஞான கற்கைக்கு விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்துதல் இரண்டாம் உலகப் போரை அடுத்து வளர்ச்சியடையத் தொடங்கியது. அரசியல் விஞ்ஞானத்தின் விடயப்பரப்பின் அம்சங்களை விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்திக் கற்க முடிவதனால் அது விஞ்ஞான இயல்பைப் பெறுகின்றது என்று கூறப்படுகின்றது. இதன் அடிப்படையிலேயே அரசியல் விஞ்ஞானம் என்னும் பெயரில் அது அழைக்கப்படலாயிற்று. விஞ்ஞானம் என்பதன் பொருள் யாதெனில் அவதானிப்புக்களின் மூலம் பெற்றுக்கொள்ளும் அறிவினை இறுதியில் நிருபிக்கக்கூடிய ஒரு நிலையாகும். ஒரு விஞ்ஞானத்தன் பிரதான பண்புகளாக பின்வருவன காணப்படுகின்றன.

1) பொருள் மிக்கதும் நிலையானதுமான நியதிகள் காணப்படல்
2) பொதுமைப்படுத்தி எதிர்வு கூறல்களை முன்வைத்தல்
3) தரவுகளை மெய்ப்பித்தலும் பொதுமைப்படுத்தலும்
4) முறையியல் பற்றிய உடன்பாடு
5) விஞ்ஞான ஆய்வுகளில் ஈடுபடுவோருக்கு போதிய பயிற்சி இருத்தல்

மேற்படி விஞ்ஞானப் பண்புகளின் படி அரசியல் விஞ்ஞானத்திலும் பின்வரும் விஞ்ஞானப் பண்புகள் காணப்படுவதாக நம்பப்படுகின்றது.

- ✶ அரசியல் விஞ்ஞானத்தில் பொதுமைப்படுத்தப்பட்ட முடிவுகளுக்கு வருதல்
- ✶ விஞ்ஞான முறைகளை அரசியல் விஞ்ஞானத்தில் பயன்படுத்துதல்
- ✶ எதிர்வு கூறல்களை முன்வைக்க முடிதல்
- ✶ அரசியல் விஞ்ஞானத்தை விஞ்ஞான முறைகளின் அடிப்படையில் செய்யமுடிதல்.
  உ - ம் :- நடத்தைவாதம் முறைமைப் பகுப்பாய்வு
- ✶ விஞ்ஞானங்களைப் போன்று அரசியலிலும் நிலையான கோட்பாடுகளும் மூலக் கொள்கைகளும் காணப்படல்
- ✶ புள்ளிவிபரரீதியான தரவுகளின் அடிப்படையில் முடிவுக்கு வருதல்

(ii) அரசியல் விஞ்ஞானத்தின் பாடப்பரப்பு இன்று அரசு மற்றும் அரசியல் அதிகாரம் என்பவற்றோடு இணைந்து பல்வேறு விடயங்களை உள்ளடக்கிப் பரவலடைந்துள்ளது. அவற்றை தலைப்புக்களின் கீழ் வகைப்படுத்தி அறிமுகம் செய்யலாம்.

- ✶ அரசு மற்றும் அரசாங்கம் பற்றிய கற்கை
- ✶ அதிகாரம் பற்றிய கற்கை
- ✶ அரசியல் கோட்பாடுகளும் சமூகத் தத்துவங்களும்
- ✶ அரசியல் கட்சிகள், அமுக்கக் குழுக்கள் மற்றும் பொதுசன அபிப்பிராயம்
- ✶ சட்டம் பற்றிய கற்கை
- ✶ அரசியல் தாபனங்கள் பற்றிய கற்கை
- ✶ சர்வதேச அரசியலும் சர்வதேச உறவுகளும்
- ✶ பொதுத்துறை நிர்வாகம்
- ✶ கொள்கை விஞ்ஞானம்
- ✶ நடத்தை வாதமும் அதனோடு இணைந்த பகுதிகளும்
- ✶ மோதல் முகாமைத்துவமும் மோதல் தீர்வும்

(2 x 10 = 20 புள்ளிகள்)

*02)*

(i) அரசாங்கம் மக்களது தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக எவற்றை, எதன் அடிப்படையில் எம்முறைகளைப் பின்பற்றி எவ்வளவு வளங்களைக் கையாண்டு பூர்த்தி செய்வது என்பது பற்றிய கொள்கையே அரச பொதுக் கொள்கையாகும்.
இது அரசியல் கோட்பாடுகளின் அடிப்படையில் அரசியல் யாப்புக்கிணங்க நாட்டுக்கு நாடு வேறுபடும்
இக்கொள்கையினுள் தேசத்தைக் கட்டியெழுப்புதல்
சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகள், சமாதானத்தையும் சமூகக் காப்பினையும் பாதுகாத்தல், பிணக்குகளைத் தீர்த்தல் பொருட்கள் சேவைகளை வழங்குதல், தேசிய அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் உள்ளடங்கி இருக்கும்.

(ii)
- ✶ பிரச்சனைகளை இனங்காணல்
- ✶ அவற்றை வியாக்கியானம் செய்தல்
- ✶ மாற்று வழிகளை இனங்காணல்
- ✶ முன்னுரிமை அடிப்படையில் தெரிவினை மதிப்பிடுதலும் ஒழுங்குபடுத்தலும்
- ✶ தெரிவு செய்யப்பட்ட கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் விதத்தினைத் திட்டமிடலும் ஒழுங்குபடுத்தலும்

(iii)




- ✶ கொள்கை முனைப்பு
- ✶ கொள்கையை உருவாக்குதல்
- ✶ கொள்கையை நடைமுறைப்படுத்தல்
- ✶ கொள்கையை மதிப்பிடுதல்

(iv) பொதுக் கொள்கை என்பது மக்களின் தேவைகளின் நிமித்தம் அரசதுறை வசமுள்ள வளங்களை சிக்கனமாகவும் இலாபகரமான முறையிலும் பயன்படுத்தி இலக்குகளை அடைதலுக்கான ஒரு கொள்கைத் திட்டமாகும்.
பொது நிர்வாகம் என்பது குறித்த கொள்கையினை அடைவதற்கான உத்திகளையும் உபாயங்களையும் ஒழுங்கமைப்புச் செயன்முறைகளையும் உள்ளடக்கிய ஒரு செயற்பணியாகும்.

(4 x 5 = 20 புள்ளிகள்)

*03)*

(i) நாமநிர்வாகி, பரம்பரையின் அடிப்படையில் பதவி ஏற்றல்
சட்டத்துறை அதிகாரம்
- ✶ பாராளுமன்றத்தைக் கூட்டுதல், கலைத்தல், ஒத்திவைத்தல்
- ✶ பிரபுக்கள் சபையின் உறுப்பினர்களை நியமித்தல்
- ✶ பாராளுமன்றம் உருவாக்கும் சட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல்

**நிர்வாகத்தறை அதிகாரம்**
- ✶ அமைச்சரவையின் தலைவரை நியமித்தல்
- ✶ பிரதமரின் ஆலோசனையுடன் ஏனைய அமைச்சர்களை நியமித்தல்
- ✶ அமைச்சர்களை மாற்றுதல் நீக்குதல்
- ✶ முப்படைத் தளபதிகளை நியமித்தல்
- ✶ போர்ப் பிரகடனம், சமாதானம் செய்தல்

**நீதித்துறை அதிகாரம்**

- ✶ உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல்
- ✶ குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்குதல்
  தண்டனைகளைக் குறைத்தல்
- ✶ நீதியின் உறைவிடமாக இருத்தல்

(ii) இந்தியப் பிரதம மந்திரி உண்மையான நிர்வாகி.
பெரும்பான்மைக் கட்சியின் தலைவர் அமைச்சரவையின் தலைவர்.
அமைச்சர்களை தெரிவு செய்தல்.
அமைச்சர்களை தேவைக்கேற்ற படிமாற்றி அமைத்தல்.
கொள்கைகளை வகுத்தல் நிர்வாகத்தின் கருவியான அமைச்சரவையை இயக்குபவர்

(iii) சுவிர்சலாந்தில் ஆட்சி மற்றும் நிறைவேற்று அதிகாரத்தினை சமஷ்டிப் பேரவையே வகிக்கிறது. இது கூட்டு நிர்வாக நிறைவேற்றுத்துறை என்றும் அழைக்கப்படுகிறது. இது 7 உறுப்பினர்களையும் கொண்டதாகும். சமஷ்டி மன்றின் தேசியப் பேரவைக்கான தேர்தலின் பின்னர் சமஷ்டி மன்றினால் சமஷ்டிப் பேரவை தெரிவு செய்யப்படுகிறது.
சமஷ்டிப் பேரவையின் அதிகாரங்கள்

- ✶ பொதுக் கொள்கைகளைத் தீர்மானித்தல்
- ✶ சட்ட மூலங்களை ஆரம்பித்து வைத்தல்
- ✶ சட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
- ✶ நிதி விடயங்கள் - வரவு செலவுத் திட்டம்
- ✶ வெளிநாட்டு உறவுகளைக் கொண்டு நடத்துதல்
- ✶ உள்நாட்டு வெளிநாட்டு பாதுகாப்பினை வழங்குதல்
- ✶ மத்திய - மாநில அரசுகளுக்குமிடையிலான தொடர்புகளைப் பேணுதல்
- ✶ ஏனைய அதிகாரங்கள்

(iv)
- ✶ சனாதிபதி கைச்சாத்திடும் வெளிநாட்டு ஒப்பந்தங்களை அனுமதிப்பதற்கும் அனுமதிக்காமல் இருப்பதற்குமுள்ள அதிகாரம்
- ✶ நிதி மமோதாக்கள் தவிர்ந்த மக்கள் பிரதிநிதிகள் சபைக்குரிய சகல அதிகாரங்களையும் யாப்பினால் பெற்றுள்ளது.
- ✶ குற்றப் பிரேரணைகளை விசாரிக்கும் அதிகாரம்
- ✶ பரிசீலனைகளை மேற்கொள்ளும் அதிகாரம்
- ✶ புகழ் வாய்ந்த இரண்டாம் மன்றம்
  - உறுப்பினர்களின் எண்ணிக்கை சிறியதாக இருத்தலும் பதவிக்காலம் நீண்டதாக இருத்தலும்
  - செனற்சபை உறுப்பினர்கள் மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படுதல்
  - செனற்சபை உறுப்பினர்களின் வரையறுக்கப்படாத பேச்சுத் சுதந்திரம்
  - செனற் சபையின் சம்மதம் இன்றி சனாதிபதியோ மக்கள் பிரதிநிதிகள் சபையோ எதனையும் மேற்கொள்ள முடியாது. இது செனற் சபையின் நிலையையும் அதன் மதிப்பையும் நிருபிக்கின்றன.

(2 x 10 = 20 புள்ளிகள்)

04)

(i) சிவில் சமூகம் என்பது அரசாங்கம், குடும்பம், சந்தைத் தாபனங்கள் ஆகிய மூன்றையும் தவிர்ந்த சமூகத்தில் செயற்படும் சகல சமூகத் தாபனங்களின் கூட்டு மொத்தமே சிவில் சமூகம் எனப்படுகிறது.

சிவில் சமூகத்துடன் தொடர்பான பிரதான 4 பண்புகள்

1. கூட்டுச் செயற்பாடுகள்
2. அதிகாரப் பிரயோகமின்மை
3. அடையாளம் - அரசு, குடும்பம், சந்தை நிறுவனங்களிலிருந்து வேறுபட்டது
4. ஆள் புலத்தை நிச்சமாக அடையாளம் காண முடியாமை

(ii) அரசியல் கலாசாரம்

அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த மனித சமூகத்தில் அரசியல் பிராணிகள் என்ற வகையில் மக்களின் நடத்தைகள் ஊடாக வெளிப்படும் அரசியல் விழுமியங்ளே அரசியல் கலாசாரமாகும்.

1. வளர்ச்சியற்ற அரசியல் கலாசாரம்
2. வளர்ச்சியடைந்த அரசியல் கலாசாரம்
3. குறைவிருத்தி அரசியல் கலாசாரம்

(iii) விகிதசம பிரதிநிதித்துவத்தின் பிரதிகூலங்கள்

1. பல கட்சிமுறை தோன்றுவதற்கு காரணமாக அமைதல்
2. கூட்டரசாங்கம் உருவாகுதலும் அவை பலவீனமாக அரசாங்கமாக இருத்தலும்
3. அரசியல் கட்சிகளின் தலைமைத்துவத்தின் ஆதிக்கம் வளர்ச்சியுறுதல்
4. வாக்காளர்களுக்கு பிரதிநிதிகளுக்குமிடையிலான தொடர்பு சேய்மையானதாக மாறுவதனால் பிரதிநிதிகள் வாக்காளர்களுக்குப் பொறுப்புக் கூறுவதிலிருந்து விடுபட முடிதல்
5. உறுப்பினர்கள் தெரிவில் கணிதரீதியான முறைகள் பின்பற்றப்படுவதனாலும் வாக்களிக்கும் முறை சிக்கல்மிக்கதாகக் காணப்படுவதனாலும் எளிதாகப் புரிந்து கொள்ள முடியாமை
6. நிராகரிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுதல்
7. வெட்டுப்புள்ளிமுறை, போனஸ் ஆசனம் வழங்கப்படுதல் என்பவற்றால் விகிதாசாரமும் சனநாயகமும் பாதிக்கப்படல்
8. இடைத்தேர்தல்கள் நடைபெறாமையால் மக்கள் பங்கேற்புக்கான வாய்ப்பு குறைவதோடு இரு பொதுத் தேர்தல்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பொதுசன அபிப்பிராயத்தை அளவிட்டு அறிய முடியாமை

(iv) கூட்டாட்சியின் சாதகங்கள்

1. வேற்றுமைகளுக்கு மத்தியில் ஒற்றுமை காணமுடிதல் சமூக வேறுபாட்டுத் தன்மைக்கு மத்தியில் அவற்றை நீக்கி ஒரே தேசம் என்ற சிந்தனை அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டிருத்தலாகும்.
2. மத்திய அரசாங்கத்தின் தன்னிச்சையான செயற்பாடும் அதிகாரக் குவிப்பும் தவிர்க்கப்படுகிறது.
3. ஒரு பெரிய நிலப்பரப்புடைய சனத்தொகை அதிகமுள்ள நாடுகளுக்குப் பொருத்தமானது
4. சுயாட்சி, தனிநபர் சுதந்திரம், கூட்டுச் சௌபாக்கியம் என்பவற்றை நிலைநிறுத்தலாம்.
5. அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கு உகந்த அரசாங்க முறையாகக் காணப்படுதல்
6. சிறிய மாநிலங்களும் சுதந்திரம் தனித்துவத்தைப் பேணமுடிதல்

(2 x 10 = 20 புள்ளிகள்)

## பகுதி - B

➢ **எவையேனும் விரும்பிய இரு வினாக்களுக்கு விடை தருக.**

*05)*

(i) ✶ *16 மாகாணப் பிரிவுகள் 5 மாகாணங்களாகக் குறைக்கப்பட்டமை*

✶ *ஓய்வூதியம் ஒழிக்கப்பட்டமை*

✶ *அரச உத்தியோகத்தர்களின் ஊதியம் குறைக்கப்பட்டமை*

✶ *கண்டி - கரையோர மாகாணங்கள் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டமை*

✶ *இராஜகாரியமுறை ஒழிக்கப்பட்டமை*

(ii) ✶ *தேசாதிபதியின் கட்டுப்பாட்டிலிருந்து சிவில் நீதி மன்றங்களை விடுவித்தல்*

✶ *முழு நாட்டையும் பாதிக்கும் வகையில் ஒற்றை நீதித்துறை முறைமையைத் தாபித்தல்*

✶ *உயர்நீதிமன்றம் ஐரோப்பியர் தொடர்பாக புறம்பான முறையில் நடைமுறைப்படுத்திய சிவில் வழக்குகளை விசாரணை செய்யும் முறையினை இல்லாது ஒழித்தல்*

✶ *சிவில் மற்றும் குற்றவியல் ஆகிய இரு வகையான மேன் முறையீட்டு வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரத்தை உயர் நீதிமன்றத்துக்கு வழங்குதல்*

✶ *வழக்கு விசாரணைகளின் போது இலங்கை மதிப்பீட்டாளர்கள் நீதிபதிகளுடன் ஒன்றிணைந்து செயற்படுதல்*

✶ *சிவில் மற்றும் குற்றவியல் அதிகாரத்தை சிவில் நீதி மன்றங்களுக்கு ஒப்படைத்தலும் பிரதான நகரங்களை மையமாகக் கொண்டு மாவட்ட நீதிமன்றுகளைத் தாபித்தலும்*

✶ *பிரதான நீதியரசரையும் ஏனைய இரண்டு நீதியரசர்களையும் கொண்ட உயர் நீதிமன்றத்திற்கு முழு நீதி அதிகாரங்களையும் ஒப்படைத்தல்*

*(2 x 10 = 20 புள்ளிகள்)*

*06)* ✶ *செனற்சபை ஏற்படுத்தப்படல்*

✶ *பல அங்கத்தவர் தேர்தல் தொகுதி உருவாக்கப்படல்*

✶ *மகா தேசாதிபதிக்குரிய நியமன அதிகாரங்கள்*

✶ *கோமறைக் கழகம்*

✶ *பொதுச்சேவை, நீதிதச் சேவை ஆணைக்குழுக்கள்*

✶ *அரசியலமைப்பின் 29 வது சரத்து*

✶ *மகாதேசாதிபதி* *(20 புள்ளிகள்)*

*07)*

(i) *பிரதமர் எவ்வாறு தெரிவு செய்யப்படுகிறார்?*

*பிரதமருக்கும் அமைச்சரவைக்கும் இடையிலான தொடர்புகள், அமைச்சர்கள் தெரிவு முறை என்பது பற்றிய விளக்கங்கள்*

(ii) *சனாதிபதியின் சட்டத்துறை சார்பான அதிகாரங்கள் பற்றிய விளக்கம்*

(iii) *அரசாங்க சேவை ஆலோசனைச் சபையின் அமைப்பு அது ஏற்படுத்தப்பட்டமைக்கான காரணங்கள் குறை நிறைகள் பற்றிய விளக்கம்*

(iv) *தேசிய அரசுப் பேரவையின் அமைப்பு, அது கொண்டிருந்த சட்டவாக்க அதிகாரம், நிர்வாகம் சார்ந்த அதிகாரங்கள், நீதித்துறை தொடர்பான அதிகாரங்கள் பற்றிய விளக்கம்*

*(2 x 10 = 20 புள்ளிகள்)*

08)

(i) சனாதிபதியின் தெரிவுமுறை

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் தனிமாற்கு வாக்கு முறைமூலம் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுகிறார். வேட்பாளர்கள் இருவர் போட்டியிட்டால் வாக்காளர்கள் யாராவது ஒருவருக்கு வாக்களிக்க வேண்டும். மூன்று வேட்பாளர்களாயின் இருவருக்கு தமது 1 வது 2 வது விருப்பத் தெரிவை இட வேண்டும். மூன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிட்டால் வாக்காளர்கள் தமது 1 வது, 2 வது, 3 வது விருப்பத் தெரிவை இடல்வேண்டும். மேலதிக விளக்கங்கள்.

(ii) மக்கள் தீர்ப்பு

மக்கள் தீர்ப்பு அவசியம் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள ஒவ்வொரு சட்ட மூலத்தையும் சனாதிபதி மக்கள் தீர்ப்புக்கான மக்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். பாராளமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு சட்ட மூலத்தை மக்கள் தீர்ப்புக்கு விடலாம். நன்மை, தீமைகள் பற்றியும் விளக்கியிருத்தல் வேண்டும்.

(iii) ஓம்பூட்ஸ்மன்

ஓம்பூட்ஸ்மன் என்ற பதவி தோற்றம் பெற்றமைக்கான காரணங்கள், ஓம்பூட்ஸ்மனின் பணிகள், அதன் நிறைகள் குறைகள் என்பன விளக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) உயர்நீதிமன்றத்தின் அதிகாரங்கள்

1. பாராளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கள் அரசியலமைப்புக்கு இசைவாக அமைந்துள்ளதா எனத் தீர்மானித்தல்
2. அரசியமைப்பினை திருத்துவதற்கான, மாற்றியமைப்பதற்கான சட்டம் நிறைவேற்றப்படு முன்னர், மக்களின் அங்கீகாரம் தேவைப்படுகின்றதா எனத் தீர்மானித்தல்
3. ஏனைய நீதிமன்றங்களினால் செய்யப்பட்ட சட்ட முறைமைகளைத் திருத்துதல்
4. சனாதிபதித் தேர்தல் பற்றிய சட்டவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்குதல்
5. தேவையானபோது சனாதிபதிக்கு சட்ட ஆலோசனைகள் வழங்குதல்

(2 x 10 = 20 புள்ளிகள்)